10th November 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கேட்ட இடத்தில் எல்லாம் எக்ஸ்பிரஸ் பஸ்ஸை நிறுத்துவது என்றால், அது ஆர்டினரி பஸ்ஸாகப் போய்விடும்; அது எக்ஸ்பிரஸ் பஸ்ஸாக இருக்காது.

பீங்கான் தொழிற்சாலை

* 428 **கேள்வி.—எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், திருவக்கரை கிராமத்தில் ஒரு பீங்கான் தொழிற்சாலை கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : திண்டிவனம் வட்டத்து திருவக்கரை கிராமத்தில் பீங்கான் தொழிற்சாலை நிறுவும் திட்டம் எதுவும் தற்சமயம் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 1962-ம் ஆண்டு செப்டம்பர் அல்லது அக்டோபரில் இதே சட்டசபையில் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, திருவக்கரையில் பீங்கான் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்த அபிப்பிராயம் இருப்பதாகத் தெரிவித்தார்கள். ரிகார்டிலும் அது வந்திருக்கிறது. ஆனால். இப்பொழுது 'இல்லை' என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அவ்வாறு ஒரு யோசனை இருந்தது. யோசனைகளெல்லாவற்றையுமே நிறைவேற்றிவிட முடியாது. அப்பொழுது யோசனை இருந்தது. இப்பொழுது அவசியம் இல்லை என்று முடிவு செய்யப்பட்டது. காரணம் என்ன என்றால், அங்கே ஐந்தாறு பீங்கான் தொழிற்சாலைகள் வர ஏற்பாடெல்லாம் ஆகி இருக்கிறது. Neyveli Ceramics and Refractories Limited, E.I.D. Parrys Ltd., Seshasayee Industries, W.S. Insualtors of India Co., ஆகியவை எல்லாம் வந்திருப்பதால் இப்பொழுது திருவக்கரையில் ஒரு பீங்கான் தொழிற்சாலை ஆரம்பிப்பது அவசியம் இல்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலே குறிப்பிட்டவற்றைத்தவிர, சர்க்கார் யூனிட் விருத்தாசலத்தில் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

Commercial Taxes Department at Madurai

* 429 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to construct new building in Madurai City to house all the offices of the Commercial Tax Department at Madurai in the same premises; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes; and